# IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.

## OS. No. 05/2015

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
| NAME | அஜய் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 09.01.2026.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. நான் என் பெயரில் பைனான்ஸ் நிறுவனம் வைத்து நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். எத்தனை நிறுவனம் வைத்து நடத்தி வருகிறேன் என்றால் ஒரே நிறுவனம். நான் பொதுவாக கடன் கொடுக்கும்போது கடன் வாங்குபவரிடம் இருந்து என்னென்ன ஆவணம் எழுதி வாங்குவேன் என்றால் பைனான்ஸ் பாண்டு மட்டும் வாங்குவேன். வேறு ஆவணம் வாங்கமாட்டேன்.

2. இறந்துபோன கோகிலா சொத்தை விற்பதற்கு யார் மூலம் என்னிடம் வந்து அறிமுகமானார் என்றால் கணபதி என்பவர் மூலம். அவர் ஏரிப்பட்டரை கிராமத்தை சேர்ந்தவர். கணபதி எனது நண்பர் என்றால் சரியல்ல அவர் என்னிடம் கொடுக்கல், வாங்கல் வைத்துள்ளார். அவர் எத்தனை வருடமாக என்னிடம் கொடுக்கல், வாங்கல் வைத்துள்ளார் என்றால் 2014, 2015–ல் இருந்து கொடுக்கல், வாங்கல் வைத்துள்ளார். அதனடிப்படையில் கணபதி கோகிலாவை என்னிடம் கடன் வாங்க அழைத்துவந்தார் என்றால் சரியல்ல.

3. கடன் கொடுப்பது தொடர்பாக குடியாத்தம் மூன்று நீதிமன்றங்களிலும் நிறைய வழக்கு தாக்கல் செய்து ஆஜராகி வருகிறேன் என்றால் சரிதான். மொத்தமாக எத்தனை வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் ஞாபகமில்லை. சுமார் 50 வழக்கு இருக்கும் என்றால் சரியல்ல. என் பெயரில் வீடு மற்றும் நிலம் உள்ளது என்றால் நிலம் மட்டும் உள்ளது. என் பெயரில் நிலம் உள்ள நிலையில் எதற்காக பாகம் பிரிக்காத கூட்டுக்குடும்ப சொத்தை வாங்க வேண்டிய அவசியம் என்னவென்றால் அவர்கள் விற்றார்கள் நான் வாங்கினேன்.

4. இதிலிருந்தே வீடு மற்றும் நிலம் உள்ள நிலையில் பிரிக்கப்படாத சொத்தை வாங்க வேண்டிய அவசியமில்லை என்றாலும் அதனால் மேற்படி கிரய ஒப்பந்தம் கடனுக்காக போடப்பட்டது என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தில் 3ல் ஒரு பங்கு நிலத்திற்கான செக்குபந்தியை சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. அதேபோல் கிரய ஒப்பந்தத்தில் நிலத்தின் கிழக்கு மேற்கு, வடக்கு தெற்கு அளவுகளை சொல்லவில்லை என்றால் சரிதான். கிரய ஒப்பந்தத்தில் சொத்தின் மதிப்பு ரூ.60,000/– என்பதற்கு மதிப்பீடு சான்று ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. 60,000/– மதிப்பு என்பது முழு சொத்தின் மதிப்பு என்றால் சரியல்ல 3ல் ஒரு பங்கின் மதிப்பு. அந்த கிரய ஒப்பந்தத்தை என் பெயரில் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். கிரய ஒப்பந்தம் எழுதியுள்ள பத்திரமானது 16.02.2013 வாங்கப்பட்டது என்றால் அது 16.12.2013–ல் வாங்கியது எழுதியவர் எழுத்துப்பிழை செய்துள்ளார். மேற்படி தேதி சரியானதா என பத்திரம் விற்பனையாளரை அழைத்து விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான்.

6. விற்பனை ஒப்பந்தம் 16.12.2013–ல் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விற்பனை ஒப்பந்தம் 17.12.2013–ல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 16.02.2013–ல் வாங்கிய பத்திரத்தை வைத்து 16.12.2013–ல் விற்பனை ஒப்பந்த பத்திரம் சுமார் 10 மாதம் கழித்து தயாரிக்க வேண்டிய காரணம் என்னவென்றால் எழுதியவர் எழுத்துப்பிழை செய்துள்ளார். இதிலிருந்தே மேற்படி ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்டது என தெரியவருகிறது என்றால் சரியல்ல.

7. விற்பனை ஒப்பந்தத்தை 11 மாத காலம் முக்கிய ஷரத்தாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலம் முக்கிய ஷரத்தாக எழுதப்பட்டதாக தாவாவில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரியவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் காலம் முக்கிய ஷரத்தல்ல என சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தெரியவில்லை வழக்கறிஞர் தான் போட்டுள்ளார். ஒப்பந்தத்தை நிறைவேற்ற தயாராக இருந்ததாக சொல்லியுள்ள நிலையில் வழக்கு போடும்போதே ஏன் பாக்கிதொகை 20,000/–த்தை வைப்பீடு செய்யவில்லை என்றால் வழக்கறிஞர் சொல்லவில்லை.

8. பாக்கிதொகையை உடனடியாக செலுத்தாததால் ஒப்பந்தம் கடனுக்காக போடப்பட்டது என தெரியவருகிறது என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஒப்பந்தத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் கணபதி மற்றும் ஜெயகாந்தன். இந்த இரண்டு நபர்களும் எனது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்கள் என்றால் நண்பர்கள்

அல்ல கணபதியை கோகிலாவிற்கு தெரியும் ஜெயகாந்தன் எனக்கு தெரிந்தவர்.

9. கணபதியை இதற்கு முன்பு எனக்கு தெரியும் என சொல்லியுள்ளேன் என்றால் கணபதியை எங்கள் இருவருக்கும் தெரியும். நான் வழக்கு தாக்கல் செய்தபோது 2 மற்றும் 3 பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்த்து வழக்கு போட்டேனா என்றால் இல்லை. அவர்களுக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. கோகிலா இறந்தபிறகு தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு இரண்டு பங்கு உள்ளது என்றாலும் அதனால் பிரதிவாதிகளை கிரய பத்திரம் எழுதி கொடுக்க சொல்லி தாவாவில் திருத்தம் செய்துள்ளேனா என்றால் இல்லை.

10. தாவாவில் மொத்த சொத்தின் விஸ்தீரணம் 3060 சதுரடி என சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. ஒப்பந்தத்தில் உள்ள சொத்து விவரப்படி தாவாவில் இல்லை என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்தபோது கோகிலாவிற்கு சுமார் 72 வயதிருக்கும் என்றால் இருக்கும். கோகிலாவிற்கு 72 வயது என்பதால் நான் படித்துக்காட்டி அவர் புரிந்து கொள்ளும் நிலையில் இல்லை என்றாலும் அவரது வயதை காரணம் காட்டி தவறான கிரய ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தை நான் கோகிலாவிடம் போட்டுள்ளதால் 2 மற்றும் 3ஆம் பிரதிவாதிகளுக்கு தொடர்பில்லை என்றாலும் அதனால் அவர்களுக்கு எதிராக நான் பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல.

11. கோகிலா என்னிடம் கடனாக வாங்கிய 40,000/-ற்கு வட்டியோடு சேர்த்து 50,000/- திருப்பி கொடுத்துவிட்டார் என்றாலும் அதனால் அவருடைய சொத்தை அபகரிக்க வேண்டி தவறான விற்பனை ஒப்பந்தத்தை தயார் செய்து இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரிக்கப்படாத சொத்து என்பதால் கோகிலா வாங்கிய கடன்தொகையை திருப்பி கேட்டுதான் நான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றாலும் சொத்தை கேட்டு வழக்குபோட முடியாது என்றால் சரியல்ல.

12. நான் தாக்கல் செய்த ஒப்பந்தத்தில் உள்ள சங்கதிகளும், தாவாவில் உள்ள சங்கதிகளும் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளும் முன்னுக்குப்பின் முரணாக உள்ளது என்றாலும் அதனால் இந்த தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. விற்பனை ஒப்பந்தம் 2 மற்றும் 3 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH    Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.